செ.வெ.எண் : 918/ 2017 நாள் : 06.12.2017

## கன்னியாகுமரி மாவட்டம்

## ஒகி புயலால் பாதிக்கப்பட்ட மலை கிராமங்களில் மின் விநியோகம் சீரமைக்கும் பணிகளை துரிதபடுத்த ஜே.சி.பி., கிரேன், மரம் வெட்டும் இயந்திரம் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வருகை.

### கூடுதல் தலைமைச்செயலர் திரு. ஹான்ஸ்ராஜ் வர்மா இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, போர்க்கால அடிப்படையில் சீரமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அனைத்துத்துறை உயர் அலுவலர்களையும் உடனடியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அனுப்பி, நிவாரண பணிகளை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். முதல்வரின் உத்தரவின்பேரில், அக்குழுவின் தலைவரும் மற்றும் கூடுதல் தலைமைச்செயலாளர் திரு. ஹான்ஸ்ராஜ் வர்மா இ.ஆ.ப., அவர்கள் கூறும்போது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட ஒகி புயலின் காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாவட்டத்தில் போர்கால அடிப்படையில் சீரமைப்பு பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை கண்காணித்து விரைவுபடுத்தி, இயல்புநிலை திரும்புவதை உறுதிபடுத்திட ஊராட்சி ஒன்றிய அளவில் பொறுப்பு அலுவலர்களாக அரசு செயலர் நிலையில் நியமனம் செய்து உத்தரவிடப்பட்டு, பொறுப்பு அலுவலர்கள் துரித நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்டுள்ள மலை பகுதிகள் மற்றும் ஊராட்சி பகுதிகளில் அதிகமான அளவில் மரங்கள் சாய்ந்து கிடப்பதால், அவற்றை உடனடியாக வெட்டி அப்புறப்படுத்தும் பணியினை துரிதமாக மேற்கொள்ள இயந்திரங்கள் மற்றும் தொழில் ரீதியாக மரம் வெட்டுபவர்களை வைத்து, போர்க்கால அடிப்படையில் சீரமைப்புப்பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஜே.சி.பி., கிரேன், மரம் வெட்டும் தொழிலில் ஈடுபடும் நபர்கள், பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஊராட்சிப்பகுதிகளில் தூய்மைப் பணியினை முழுமையான அளவு செயல்படுத்த, சுகாதாரப்பணியாளர்களை கொண்டு, பிளீச்சிங் பவுடர் தெளித்தல், உயர் நீர்த்தேக்கத்தொட்டிகளில், தண்ணீரில் குளோரினேசன் செய்திடவும், சாலைகளில் ஏற்பட்டிருக்கும் பெரிய மற்றும் சிறிய பள்ளங்களை சரிசெய்து, போக்குவரத்து பயன்பாட்டிற்கு உகந்ததாக மாற்றியமைக்க, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், மலை கிராமங்கள் மற்றும் ஊராட்சிகளில் போர்க்கால அடிப்படையில் மின்விநியோக பணிகளை சீர்செய்ய, 35 ஜே.சி.பி-களும், 17 கிரேன், 40 மரம் வெட்டும் இயந்திரங்கள், 22 மரம் வெட்டும் தொழிலாளர் குழுக்கள் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வருகை தந்து, பணிகள் மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக, இரவிபுதூர்கடை, பூதப்பாண்டி,

அழகியபாண்டியபுரம், ஈத்தாமொழி, குழித்துறை, சாளியூர் போன்ற பகுதிகளில் இவையனைத்தும் ஈடுபடுத்தி, மின்விநியோகம் சீரமைக்கும்பணிகள் விரைவு படுத்தப்படும்.

இப்பணிகளை மேற்கொள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்து வருகை புரிந்து, பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள் 95 ஊராட்சிகளில், 1,157 குக்கிராமங்களில் குடிநீர் விநியோகம் சீரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மின்சாரம் இல்லாத பகுதிகளில் ஜெனரேட்டர் மூலமாக இப்பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்கு தேவையான டீசல் மற்றும் உதவிகளை ஊராட்சி அலுவர்கள், மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செய்து வருகின்றன. இதன் மூலம், ஊராட்சிப்பகுதிகளில், 100 சதவீதம் குடிநீர் வழங்கும் பணி உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து, கிராம சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் மரங்கள் அகற்றும் பணிகள் முடிவடைந்துள்ள பகுதிகளில், உடனடியாக சாலை பணியாளர்களை கொண்டு சாலை செப்பனிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஊராட்சிப் பகுதிகளில் உள்ள பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் விழுந்து கிடக்கும் மரங்களை துரிதமாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் அனைத்து ஊராட்சிகளிலும், ஒன்றிய குழுக்கள் அமைக்கப்பட்டு (மைக்ரோ லெவல்) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என குழுவின் தலைவரும் மற்றும் கூடுதல் தலைமைச்செயலாளர் திரு. ஹான்ஸ்ராஜ் வர்மா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**